பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 02 | வியாழக்கிழமை | 17.08.2023 | அதிர்வு 16

## 9 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிரடியாகக் குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் ஒன்பது அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை மீண்டும் குறைத்துள்ளது.

அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் இந்த விலை குறைப்பு இன்று முதல் அமுலுக்கு 02

# 13 ஐ முற்றாக நீக்கும் சட்டத்தை முடிந்தால் கொண்டு வாருங்கள்!

## நீங்கள் இன்னமும் திருந்தவில்லை என்பதை உலகம் அறியட்டும் என விமல் அணியைத் தாக்குகிறார் மனோ



கொழும்பு, ஓகஸ்ட் 17

"மஹிந்த ராஜபக்ஷ 13 ப்ளஸ் பற்றி பேசினார். இப்போது ரணில் விக்கிரமசிங்க 13 மைனஸ் பற்றிப் பேசுகின்றார். நீர் 13 மைனஸ்ஸும் கொடுக்கக் கூடாது என்கிறீர். 03



## அடிப்படை அறிவற்ற எம்.பிக்களே 13 இற்கு எதிராகப் போர்க்கொடி!

### அமைச்சர் ஹரின் விளாசல்



"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க முடியாது. அதை முழுமையாக அமுல்படுத்தியே தீர வேண்டும். அடிப்படை அறிவற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களே 13 இற்கு எதிராகப் போர்க்கொடி தூக்குகின்றனர்." 10

## வன்முறையைத் தூண்டுவோருக்கு சிறைச்சாலை வாழ்க்கைதான் பரிசு

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

மக்கள்மத்தியில்வன்முறையைத் தூண்டும் வகையில் கருத்துக்களை அள்ளி வீசி அரசியல் செய்பவர்களுக்குச் சிறைச்சாலை வாழ்க்கைதான் பரிசாகக் கிடைக்கும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். 03





## மக்களைக் கொல்லும் அரசுடன் எந்தவித சம்பந்தமும் இல்லை!

### சஜித் சத்தியம்

"மக்களைக் கொல்லும், மக்களை ஒடுக்கும் அரச பயங்கரவாதத்தை முன்னெடுத்து வரும் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசுடன் எந்தவித உடன்பாடோ அல்லது இணக்கப்பாடோ எங்களுக்கு இல்லை. எங்கள் கட்சி இந்நாட்டு மக்களின் மனித உரிமைகள் மட்டுமன்றி பொருளாதார, சமூக மற்றும் அரசியல் உரிமைகளையும் பாதுகாத்துக் 10

## தமிழ் மக்களுக்குத் தேவை விடுதலையே தவிர சீனியோ,சக்கரையோ அல்ல என்கிறார் விந்தன்

### ரெலோ தலைவர் செல்வத்துக்கு எதிராக அவர் போர்க்கொடி

"தமிழ் மக்களின் வழிபாட்டு, வாழிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் தலையை வெட்ட வாளுடன் வருவார் என மேர்வின் சில்வா கூறுகிறார். நாங்கள் மக்களுக்காகப் போராட வந்த இலட்சியத்தின் ஒரு துளியைக்கூட இன்னும் பெறவில்லை. மக்களின் விடுதலையே எமது கொள்கையாக இருக்க 09





## இரகசியம்

மகேஸ்வரன் எம்.பி. தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்தை நேற்று குறிப்பிட்ட நான் என்னைப் பற்றி ஒரு கேள்விக்கும் மஹிந்த கூறிய பதிலை இன்று விவரிப்பேன் என்று சொல்லி இருந்தேன். அதிலிருந்து இன்று ஆரம்பிப் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

போம்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான காலத்திலிருந்து அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெறும் இந்து சமய நிகழ்வுகளுக்கு – குறிப்பாக தைப்பொங்கல், தீபாவளி, நவராத்திரி போன்றவற்றுக்கு – என்னை தவறாது அழைப்பார்.

கடந்தாண்டில் அப்படி ஒரு நிகழ்வில் இடம் பெற்ற சம்பவம் இது.

பூஜை அவரது வீட்டில் நடு ஹோலில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பூஜை சமயம் அங்கிருந்த நான், சற்று நேரத்தில் வீட்டு வெளிப்புறத்தில் போடப்பட்டிருந்த கொட்டகையில் ஏனைய விருந்தினர்கள், அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகளு டன் இருந்து பேசிக் கொண்டிருந்தேன். நிகழ்ச்சி முடிந்து ஒவ்வொருவராகப் புறப்பட்டார்கள். நானும் புறப்பட ஆயத் தமானேன். வீட்டு நடு ஹோலில் வரி சையாக அடுக்கப்பட்டிருந்த கதிரைக ளில் ஒன்றில் மஹிந்த அமர்ந்திருந்தார். பக்கத்தில் பல கதிரைகள் வெறுமையாக இருந்தன. அவருக்கு இரண்டு, மூன்று கதிரைகள் தள்ளி சில சிங்களப் பத்திரிகை யாளர்கள் அமர்ந்திருந்தார்கள். நான் நடு ஹோலுக்குள் நுழைந்து, சற்றுத் தொலைவில் இருந்தவாறு மஹிந்த ராஜபக்ஷவைப் பார்த்து தலையசைத்து, போய் வருகிறேன் என்று குறிப்பிட்டேன். அவர் கையைக் காட்டி என்னை அழைத் தார். நான் அவருக்கு நெருக்கமாக போனேன். கதிரையில் அமர்ந்திருந்த அவரோடு மிக நெருக்கமாகக் குனிந்து நான் பேச முற்பட்ட போது, அவர் என் தோளில் கையை வைத்து தமக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் என்னை அமருமாறு அழுத்தினார். நான் பக்கத்துக் கதிரையில் இருந்து அவரோடு சில நிமி டங்கள் உரையாடினேன். இரண்டு, மூன்று கதிரைகள் தள்ளி அமர்ந்திருந்த பெரும்பான்மையின ஊடகவியலாளர்கள் எனக்கு அவர் கொடுத்த முக்கியத்து வத்தை எரிச்சலோடு அவதானித்ததை நான் பார்த்தேன். ஓரிரு நிமிடங்கள் அவ ரோடு உரையாடிவிட்டு நான் புறப்பட் டேன். அதன் பின்னர் அங்கு நடைபெற்ற சம்பவத்தை நெருக்கமான ஒரு வட்டாரம் மூலம் நான் அறிய முடிந்தது.

நான் புறப்பட்டு போவதை மஹிந்த பார்த்துக் கொண்டிருந்தார். நான் சற் றுத் தொலைவு சென்றதும் பக்கத்தில் இருந்த சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் அவரைப் பார்த்து "இவன் எப்போதும் உங்களுக்கு எதிராக எழுதுகின்ற ஒரு தமிழ்த் தீவிரப் போக்கு பத்திரிகையா ளன். இப்போது போய், நாளை காலைப் பத்திரிகையில் உங்களைத் திட்டி எழுது வான். இவனுடன் நீங்கள் நீண்ட பல ஆண்டுகளாக இறுக்கமாக பழகுகிறீர் கள். இது தேவையா, சரியா?" – என்ற சாரப்பட அந்தச் சிங்கள பத்திரிகையாளர் மஹிந்த ராஜபக்ஷவைப் பார்த்துக் கேள்வி எழுப்பினாராம்.

மஹிந்த ஒரு நமுட்டுச் சிரிப்பு சிரித்த படி சில செக்கன்கள் பொறுத்து விட்டு ஒரு பதில் கூறினார்.

"நீயோ நானோ அவனுடைய கதிரை யில் இருந்தால் அப்படித்தான் எழுத வேண்டி இருக்கும்" என்று சாவகாசமாக சிரித்தபடி கூறினாராம் மஹிந்தர்.

மகேஸ்வரனும் நானும் தமிழ் அரசி யல்வாதியாகவும், தமிழ்ப் பத்திரிகையாள ராகவும் ஆற்ற வேண்டிய பணி, கடமை, பொறுப்பு யாது என்பது மஹிந்தருக்குப் புரிந்திருந்தது. அதனால்தான் நாங்கள் பல விடயங்களில் **agree to disagree** (முரண்பட இணங்குவது) என்ற நிலைப் பாட்டில் இயங்கினோம் என்று எனக்குத் தோன்றுகிறது.

இனி, பழைய விடயத்துக்கு வருவோம். 2005 ஜனாதிபதித் தேர்தல் வெற்றி யின் போது, அது தமிழ் மக்களை வாக்க ளிக்க விடாமல் புலிகள் தடுத்தமையால் தமக்கு கிடைத்த பரிசு என்பதை மஹிந்தர் நன்கு உணர்ந்து கொண்டிருந்தார்.

இது தமது சார்பில் புலிகளோடு பேசப் போய், தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுக்கும் முடிவுக்கு புலிகளை இணங்க வைத்த தமது தூதுக்குழுவின் வெற்றிச் சாதனை என்று அவர் ஆரம்பத் தில் எண்ணிக் கொண்டிருந்தார்.

அந்தத் தூதுக்குழுவில் போனவர்கள் பற்றிய முழு விவரமும் எனக்கு தெரியாது. ஆனால் இப்போதைய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அதில் முக்கியமானவராக இருந்தார் என்பதை நான் அறிந்திருந்தேன். பின் னாளில் தமிழ்ச்செல்வன் தந்த தகவ லின்படி அந்தத் தூது குழுவில் பஸில் ராஜபக்ஷவும் இருந்தார் என நான் அறிந்தேன். ஆனால் தென்னிலங்கை தகவல்களின்படி அந்த தூது குழுவில் இயங்கியவரில் முக்கியமானவர் டிரான் அலஸ்தான்.

அந்தத் தூதுக்குழு புலிகளோடு நிதி பரிமாற்றத்தில் ஈடுபட்டது என்றும், அதில் முக்கியமானவராக டிரான் அலஸ் இருந்தார் என்றும் அப்போது செய்திகள், கதைகள் அடிபட்டன.

என்ன தொகை கொடுத்தார்கள், எவ்வ ளவு தொகை கைமாறியது, எவ்வளவு கொடுத்தார்கள் என மஹிந்தவுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது என்பவையெல் லாம் எனக்குத் தெரியவே தெரியாது.

ஆனால் தேர்தல் வெற்றி அறிவிக் கப்பட்ட பின்னர், வெற்றிக்களிப்பில் இருந்த மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க டிரான் அலஸ் சென்ற சமயம் மஹிந்த ராஜபக்ஷ தான் அமர்ந்திருந்த கதிரை யிலிருந்து எழுந்து ஓடி வந்து டிரான் அலஸை மகிழ்ச்சியோடு கட்டிப்பிடித்துக் கொண்டாடினார் என நான் அறிந்தேன்.

ஆனால் இந்த மகிழ்ச்சியும் நட்புறவும் நீண்ட காலம் நீடிக்க வில்லை.

புலிகளுடன் சமாதான பேச்சுக்கள் ஆரம்பமான 2006 ஆம் ஆண்டு தொடக்க காலகட்டத்தில் நான் பல தடவைகள் மஹிந்த ராஜபக்ஷவை அவரது அலரி மாளிகை இல்லத்தில் சந்தித்துப் பேசினேன். பல விடயங்களை மனம் விட்டு பேசினேன்.

அப்போது ரணில் விக்கிரமசிங்க சார்பில் தேர்தல் சமயத்தில் புலிகளிடம் தூது போன விடயங்களையும் நான் சொன்னேன்.

அவர் ஆச்சரியத்தோடு திரும்பத் திரும்ப விடயங்களை கேட்டார். ரணி லோடு ஏற்பட்ட முரண்பாடு கருதித்தான் புலிகள் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுக்கும் முடிவை எடுத்தார்கள் என்பதையும், தங்கள் கோரிக்கைக்கு இணங்கி, ரணில் இறங்கி வந்திருப்பா ரானால் கடைசி நேரத்திலும் தங்கள் முடிவை மாற்றி, தமிழ் மக்களை வாக்க ளிக்க விடும் நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தார்கள் என்பதையும், ஆனால் ரணில் இறங்கி வராத காரணத்தினால் தான் புலிகள் வாக்களிப்புப் பகிஷ்கரிப்பை முழு அளவில் நடைமுறைப்படுத்தினார் கள் என்பதையும் நான் மஹிந்தவுக்குத் தெளிவுபடுத்தினேன். ஒன்றுக்கு இரண்டு, மூன்று தடவைகள் இந்த விடயங்களை அவர் திரும்பத் திரும்ப என்னிடம் கேட்டு உறுதிப்படுத்திய போது, அவர் மனதில் வேறு ஏதோ சிந்தனைகள்,சந்தேகங்கள், சீற்றங்கள் ஓடுகின்றன என்பதை என் னால் உணர முடிந்தாலும் அவற்றை அறிய முடியவில்லை.

இந்த காலகட்டத்தில் டிரான் அலஸ், மங்கள சமரவீர, சூரியாராய்ச்சி போன்ற அரசியல்வாதிகளுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் திடீரென முரண்பாடுகள் தோன்றின. அவர்கள் மஹிந்த அணியிலிருந்து விலகினர் அல்லது விலக்கப்பட்டனர்.

தொடர்ந்து வந்த காலகட்டத்தில் டிரான் அலஸ் ஆரம்பித்த 'மௌபிம' பத்தி ரிகை மீது மஹிந்த அரசின் கிடுக்குப்பிடி விழுந்ததை நான் அறிந்தேன். அந்தப் பத்திரிகைக்கான முதலீடு எங்கிருந்து வந்தது என்பதை கண்டறியும் விதத்தில் அதன் கணக்காளர் உட்பட பலர் கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆவணங்கள் நோண்டி ஆராயப்பட்டன. டிரான் அலஸுக்குக் கொடுக்கப்பட்ட ஓர் அரச அதிகார சபை ஊடாக புலிகளுக்கு நிதி கையளிக்கப்பட்டதான குற்றச்சாட்டு வழக்குகளும் தொடுக்கப்பட்டன. மஹிந்த அரசில், மஹிந்த தரப்புக்கு ஏதோ துரோகம் செய்தவர் போல டிரான் அலஸ் கையாளப்பட்டார் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

இதற்குமேல் இதில் உள்ள தொடர்பு களை – சூத்திரங்களை – நான் ஊகித்த வற்றை – நான் வெளிப்படையாக கூற விரும்பவில்லை. கையில் ஆதாரங்கள், ஆவணங்கள், சாட்சியங்கள் இல்லாமல் வெளிப்படையாக நான் எழுதுவது பொருத் தமாகாது. ஆனாலும் இத்தகவல்களை வைத்துக் கொண்டு புலிக்கு வழங்கப் பட்டதாக மஹிந்த தரப்புக்குக் காட்டப்பட்ட நிதி எங்கு சென்றிருக்க கூடும் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்வார்களாக.

இவ்வளவு தூரம் நான் வெளிப்படை யாக சில விடயங்களை குறிப்பிட்டது கூட சட்டரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் எனக்கு பாதுகாப்பு அற்றது என்பதை நான் அறிவேன். ஆகையால் இதற்கு மேல் நான் விவரிக்க விரும்பவில்லை.

புலிக்கு செலுத்திய பெயரில் பெரும ளவு வாய்க்கால் வழி ஓடி, நெல்லுக்குப் போகாமல் புல்லுக்குப் பொசிந்தது என் பதை வாசகர்கள் புரிந்து கொண்டால் சரி.

## 9 அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், 400 கிராம் உள்நாட் டுப் பால் மா 29 ரூபாவால் குறைக் கப்பட்டு 970 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒரு கிலோ கிராம் தாய்லாந்து நெத் தலி 15 ரூபாவால் குறைக்கப்பட்டு 1160 ரூபாவுக்கும், சிவப்பு சீனி ஒரு கிலோ கிராம் 10 ரூபாவால் குறைக்கப் பட்டு 350 ரூபாய்வுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒரு கிலோ கிராம் சோயா மீட் 25 ரூபாவாலும், ஒரு கிலோ கிராம் உருளைக் கிழங்கு 5 ரூபாவாலும் குறைக்கப்பட்டு முறையே 625 மற்றும் 325 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

ஒரு கிலோ கிராம் பாசுமதி அரிசி 15 ரூபாயால் குறைக்கப்பட்டு 675 ரூபாவுக் கும், ஒரு கிலோ கிராம் வெள்ளைப்பூடு 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 630 ரூபாவுக் கும் விற்பனை

செய்யப்படவுள்ளன

சிவப்பு பச்சை அரிசி ஒரு கிலோ கிராம் 2 ரூபாவால் குறைக்கப்பட்டு 147 ரூபாவுக்கும், ஒரு கிலோ கிராம் கடலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 555 ரூபாவுக் கும் விற்பனை செய்யப்படவுள்ளன

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாளை பொங்கப் போவது எது?

நல்லாட்சி அரசின் முடிவில் - கோட்டாபய ராஜ பக்ஷ ஜனாதிபதியான காலம் தொட்டே - மீண்டும் இனவாதமும் மதவாதமும் - குறிப்பாக பௌத்த, சிங்களப் பேரினவாதம் - பேயுருக்கொண்டு, எழுச்சி பெற்று, சந்நதமாடி வருகின்றது.

பேரினவாதத்தைத் தூண்டி, அந்தக் கிளர்ச்சியில் தான் - எழுச்சியில்தான் - கடந்த ஜனாதிபதித் தேர்த லில் கோட்டாபய ராஜபக்ஷ பெருவெற்றியீட்டினார். தொடர்ந்து வந்த பொதுத் தேர்தலில் அவரது கூட் டணிக்கு மகத்தான வெற்றி கிட்டியதும் அப்படித் தான்.

அதைத் தொடர்ந்து வந்த பொருளாதார நெருக்கடி எனும் பெருவீழ்ச்சியால் சற்று அடங்கிக் கிடந்த பேரின வாதம், புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிளறி விட்ட 13 ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் என்ற உசுப்பேத்தலில் மீண்டும் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

13 ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத் தையோ அல்லது அதன் அடிப்படையிலான மாகாண சபைத் தேர்தலையோ தாம் இப்போதைக்கு முன்னெடுக்கப் போவதேயில்லை என்பது ஜனாதிபதி ரணிலுக்கு நன்கு தெரியும். அப்படி இருந்து கொண்டும், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை வேறு தேர்தல் களை நடத்தாமல் காலத்தைக் கொண்டிழுக்கவும், பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் ஆகிய இரு தரப்புகளிடமுமே தனது ஆதரவுத் தளத்தை தக்க வைக் கவுமே 13 என்ற துரும்பை பேச்சுக்களில் எடுத்து விட்டு, அரசியல் காய் நகர்த்துகிறார் ரணில் என்பது அப்பட்டமானது.

ஆனால் அந்த 13 என்ற ஊக்கி மூலம் அவர் ஊதி, உசுப்பேத்தி, எழுப்பி விட்ட பேரினவாதம், ஏற்கனவே நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டு இருந்த நிலை யில் இருந்து, இப்போது விளாசி எரியும் கட்டத்துக்கு நிலை மாறி இருக்கிறது.

இந்த மதவாத, இனவாதப் பிசாசுகளின் பேயுருத் தோற்றத்தின் மோசமான விளைவுகளை நாடு சந்திக் கத் தயாராகும் களப்புற நிலை தென்படுகின்றது. இவ்விடயத்தில் அடுத்து வரும் இரண்டு, மூன்று தினங்களும் தீர்க்கமானவை.

வெடுக்குநாறிமலை, கன்னியா வெந்நீரூற்று, பறாளாய் கோவில் என்ற வரிசையில் இப்போது சூட்டின் உச்சத் தில் தகித்துக் கொண்டிருப்பது குருந்தூர்மலை விவகா ரம். நீதிமன்றத்தின் உத்தரவுக்கும் அனுமதிக்கும் அமைய அங்கு நாளை வெள்ளிக்கிழமை ஆதிசிவன் ஐயனாருக்கு பொங்கல். அதைத் தடுப்பதற்கு பல நூ று கிலோ மீற்றர் தொலைவிற்கு அப்பால் இருந்து ஆயத்தங்கள் நடக்கின்றன என எச்சரிக்கப்பட்டு இருக்கின்றது.

"குருந்தூர்மலையில் நாளை இந்துக்கள் வழிபாட் டில் ஈடுபடப் போகின்றார்கள். புத்தசாசனத்தைப் பாதுகாக்க பௌத்தர்கள் குருந்தூர்மலையில் அணி திரள வேண்டும்" என இனவெறிப் போக்கைக் கக்கி வரும் உதய கம்மன்பில்ல எம்.பி. அழைப்பு விடுத்திருக் கின்றார். சரத் வீரசேகரா போன்ற பேரினவாதிகளின் வலி மையான அரூபக்கரங்களும் இந்த வெறிப்போக்கின் பின்னால் இணையக் கூடும்.

'இன,மத வன்முறைகளைத் தூண்டுவோருக்கு சிறைச் சாலைதான் பரிசு!' - என்று வெறும் வாய்ப்பந்தல் பேச்சு பேசும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், இவ்விவகாரத்தில் காத்திரமான நடவடிக்கை எடுக் கத் தவறினால் பேரழிவுக்கு நாளை குருந்தூர் மலை ஆரம்பப் புள்ளியாகி விடலாம்.

# கிணற்றில் தவறி விழுந்து ஐந்து வயது சிறுமி மரணம்

கிணற்றில் தவறி விழுந்து 5 வயது சிறுமி உயிரிழந்துள் ளார்.

மாத்தறை - கம்புறுபிட்டிய பிரதேசத்தில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சிறுமி முன்பள்ளிக்குச் செல்வதற்காகக் குளித்துக் கொண்டிருந்தபோதே கிணற்றில் தவறி விழுந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தை மீட்ட பொலிஸார், அதைப் பிரேத பரிசோத னைக்காகக் கம்புறுபிட்டிய வைத்தியசாலையில் ஒப்படைத் தனர்.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்த சிறுமியின் பெற்றோரி டம் வாக்குமூலங்களைப் பெற்ற பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 13ஐ முற்றாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்மூலம் இந்நாட்டு தமிழருக்கு நீர் தரும் செய்தி என்ன? நீர் கூறுவதை கேட்டுக்கொண்டு, கொடுப்பதை சாப்பிட்டுக்கொண்டு வாயை மூடிக்கொண்டு நாம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றீரா? அது ஒருபோதும் நடக்காது. அதைவிட 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அகற்றும் திருத்தச் சட்டமூலத்தை உமது கட்சி, நாடாளு மன்றத்தில் கொண்டு வரட்டும். அதை நாடாளுமன்றம் எப்படி எதிர்கொள்கின்றது என்பதை உலகம் அறியட்டும். அதன் பின் வருகின்ற விளைவுகளை நீங்கள் எதிர்கொள் ளுங்கள்."

– இவ்வாறு விமல் வீரவன்ஸ எம்.பி. தலைமையிலான உத்தர லங்கா சபாகய கட்சியின் எம்.பி. கெவிந்து குமாரதுங் கவை நோக்கித் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலை வர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியில் நடைபெற்ற சிங்கள மொழி அரசியல் விவாத நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், எம்.பிக்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தலைமையிலான கட்சிகள் கூட்டாக அமைத்துள்ள உத்தர லங்கா சபாகய கட்சியின் எம்.பி. கெவிந்து குமாரதுங்கவைவிடம் மேலும் கூறியதாவது:-

"நான், பிரிபடாத இலங்கைக்குள்ளே நியாயமான தீர்வைத் தேடுகின்றேன். அதுவே எங்கள் தமிழ் முற் போக்குக் கூட்டணியின் கொள்கை. நீங்கள் எந்தவொரு தீர்வுக்கும் தயார் இல்லை. அதுதான் உங்கள் கொள்கை. அப்படியானால் உங்களுக்கு நான் ஓர் ஆலோசனை கூற விரும்புகின்றேன்.

இந்த ப்ளஸ், மைனஸ் வெட்டிப் பேச்சுகளை எல்லாம் மூடை கட்டி வைத்து விட்டு, உங்கள் கட்சியின் சார்பாக, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அகற்றும் திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வாருங்கள். அதை இந்த நாடாளுமன்றம் எப்படி எதிர்கொள்கின்றது, எம்.பிக்கள் எப்படி வாக்களிப்பார்கள் என நாம் தெரிந்து கொள்ளலாம். உலகமும் தெரிந்துகொள்ளும். அதன் பின் வருகின்ற விளைவுகளை நீங்கள் சந்திக்கலாம்.

உலகம் சொல்வதைக் கேட்காமல், உலகை ஒதுக்கி வைத்து, கதவுகளை மூடி வைத்து, இந்த நாட்டை நடத்திய காலம் ஒன்று இருந்தது. அதனால்தான் இன்று இந்நாடு விழுந்து போய்க் கிடக்கின்றது. ஆகவே, இப்போதும் நீங்கள் திருந்தவில்லை என உலகம் அறியட்டும்." – என்றார்.

## வன்முறையைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டின் சட்டத்தை மீறி அரசியல்வாதி உள்ளிட்ட எவரும் செயற்பட முடியாது. சட்டங்களைச் சவாலுக்குட்படுத்தி எவரும் கருத்துக்களையும் வெளியிட முடியாது.

இன வன்முறையை – மத வன்முறையைத் தூண்டும் வகையில் எவரும் செயற்படவும் முடியாது.

சிலர் சட்டத்தை மதிக்காமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார்கள். அவர்களுக்குச் சிறைச்சாலை வாழ்க்கைதான் பரிசாகக் கிடைக்கும்." – என்றார்.

# குருந்தூர்மலையில் நாளை இந்துக்கள் பொங்கல் பௌத்தர்களை அணி திரள கம்மன்பில அழைப்பு!

குருந்தூர் மலையில் நாளை வெள்ளிக்கிழமை இந்து மத வழிபாட்டில் ஈடுபட போகின்றனர் என்று தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள். புத்தசாசனத்தை பாதுகாக்க பௌத்தர்கள் குருந்தூர்மலை பகுதியில் ஒன்றிணைய வேண்டும். இந்து – பௌத்த மோதலை தடுக்கவும், தமிழ் அடிப்படைவாதிகளை கட்டுப்படுத்தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். – என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உருமய கட்சி காரியாலயத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்.

நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்களுக்கு மாத்திரம்தான் பிரச்சினை உள்ளது என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்



சிறுபான்மை சமூகமாக வாழும் சிங்களவர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படும். பௌத்த மரபுரிமைகள் முழுமையாக தமிழ் பிரிவினைவாதிகளால் அழிக்கப்படும்.

2200 ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட குருந்தூர் தூபியை இந்து கோயில் என தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடுகிறார்கள்.

நாளை (வெள்ளிக்கிழமை) குருந்தூர் மலையில் இந்து மத வழிபாட்டில் ஈடுபட போகின்றார்கள் எனத் தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.ஆகவே புத்தசாசனத்தைப் பாதுகாக்க பௌத்தர்கள் குருந்தூர் மலை பகுதியில் ஒன்றிணைய வேண்டும். குருந்தூர் மலையில் பௌத்த – இந்து மோதலை தடுக்கவும்,தமிழ் அடிப்படைவாதிகளை கட்டுப்படுத் தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார்.

# குருந்தூர்மலை பொங்கலை குழப்பும் முயற்சி நடக்கிறது!

## எச்சரிக்கின்றார் சிவநேசன்

பல நூறு கிலோமீற்றர்களுக்கு அப்பால் இருந்து வந்து குருந்தூர்மலை பொங்கலை குழப்புகின்ற முயற்சிகள் இடம்பெறுகின்றன. பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு உறுதுணையாக இருக்க அனைவரும் முன்வர வேண்டும் என முன்னாள் வடமாகாண சபை விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தெரிவித்தார்.

குருந்தூர் மலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி (நாளை) இடம்பெறவுள்ள பொங்கல் நிகழ்வு தொடர்பில் முல்லைத்–தீவு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

தற்போது சர்ச்சைக்குரிய பேசுபொருளாக இருக்கின்ற குருந்தூர்மலை தமிழர்களுடைய பாரம்பரிய ஒரு பிரதேசம். தொன்று தொட்டு அங்கே வாழும் தமிழ் மக்கள் ஆதிசிவன் ஐயனார் ஆலயத்திலே பொங்கலை மேற்கொள்ளும் போது இந்துக்கள் மாத்திரமல்லர், முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்களும் கலந்து கொள்வது ஆதி காலம் தொட்டு ஒரு நிகழ்வாக இருந்து கொண்டிருக்கின்றது.

கடந்த சில காலங்களாக அந்த பிரதேசங்களில் எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லாத மக்களால் ஆக்கிரமிப்பிற்கு உரிய நோக்கத்துடன் மேற்கொள்கின்ற இந்த விடயம் வேதனைக்குரியதாகக் கருதப்படுகின்றது. அந்த ஆலயத்திலே ஒரு பொங்கல் நிகழ்வை மேற்கொள்வதற்காக ஆலய நிர்வாகம் மேற்கொண்டிருக்கின்ற அந்த முயற்சிக்கு வன்னியிலே வாழ்கின்ற மக்கள் மாத்திரமல்ல வடக்கு கிழக்கிலே உள்ள தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.



இந்தப் பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்காக பல நூறு கிலோமீற்றர்களுக்கு அப்பால் இருந்து வந்து அவற்றை குழப்புகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற இந்த நேரத்தில் ஆலய பரிபாலன சபையினர் பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என வேண்டிக்கொள்கிறோம். இது எங்களுடைய தாயக பிரதேசம் . இப் பிரதேசத்தை பாதுகாப்பது எங்களுடைய கடமை.

ஆகவே ஆலய பரிபாலன சபையினர் அரசியலிலோ அல்லது மத விடயத்திலோ சம்பந்தப்படாதவர்கள். நாங்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து கடமைகளை நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். – என தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டிந்தனர்.

# காணி விடுவிப்பு இணக்கப்பாட்டை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்து

மக்களுடைய காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுகின்ற சூழ்நிலையில், காணி விடுவிப்பு என்பது நல்ல விடயமாக பார்க்க கூடியதாக இருக்கின்றது. இதனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களின் காணி பிரச்சினைகள் தொடர்பில் விஷேட கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

“மாவட்டச் செயலகம் கொடுத்த பல இடங்களில் தற்போது சில இடங்கள் விடுவிக்கின்ற முடிவை எட்டியிருக்கின்றன.

மேலும் விடுவிக்கப்பட வேண்டிய காணிகளாக இருந்தாலும் இங்கு இருக்கின்ற அதிகாரிகளினால் இயலாத ஒரு நிலை ஏற்படுகின்ற போது அதனை நடுவர் குழுவிற்கு அனுப்புவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எங்களை பொறுத்தமட்டில் இந்த விடயங்கள் நடைமுறைக்கு வர வேண்டும் என்பதனை பெரிதாக எதிர்பார்க்கின்றோம்.

ஏனென்றால் இது மக்களுடைய காணிகள். ஏற்கனவே திட்டமிட்டு அபகரிக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே விடுவிப்பு என்பது உண்மையிலே நல்ல விடயமாக பார்க்க கூடியதாக இருக்கின்றது. இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் .

கூட்டம் போட்டு, பேசி முடிவுகளை எடுத்ததன் பின் மீண்டும் அந்த மக்கள் அங்கே செல்கின்ற போது கைது செய்து நீதிமன்றத்திற்கு அனுப்புகின்ற செயற்பாடுகள் இருக்க கூடாது என்பது எங்களுடைய எண்ணமாக இருக்கின்றது.




அந்தவகையிலே எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை நாங்கள் கோரியிருக்கின்றோம்.

பல விடயங்களை ஆராய்ந்து உடனுக்குடன் தீர்வுகளை கண்டிருக்கின்றோம். அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். – எனவும் தெரிவித்துள்ளார்.

# நல்லூர் உற்சவ காலத்தில் மாணவர்களுக்கான பஜனை

நல்லூர் கந்தப்பெருமான் மகோற்சவ காலத்தில் மாணவர்களிடையே ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் இறைபக்தியை அதிகரிக்கும் முகமாகவும் நடத்தப்படுகின்ற பஜனை நிகழ்வு வழமை போல இம்முறையும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில், ஸ்தாபக ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் வழிகாட்டலில் இடம்பெறும்.

பஜனை கொடியேற்றத் திருவிழாவில் இருந்து (21ஃ08ஃ2023) கொடியிறக்கத் திருவிழா வரை (14ஃ09ஃ2023) முருகப் பெருமான் காலையில் உள்வீதியில் வலம் வரும் பொழுதும் மாலையில் வெளிவீதி வலம் வரும்போதும் நடைபெறும்.

இப்பஜனை நிகழ்வில் பங்குபற்றி நல்லைக் கந்தப்பெருமானின் திருவருளைப் பெற வருமாறு பாடசாலை மாணவர்களையும், அறநெறிப் பாடசாலை மாணவர்களையும், முருகப்பெருமான் அடியவர்களையும் சிவகுரு ஆதீனம் அன்புடன் அழைக்கின்றது.

பஜனையில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகளும் (அதிபர் / பொறுப்பாசிரியர் / சைவசமய ஆசிரியர் / சங்கீத ஆசிரியர் / ஆசிரியர் / அறநெறி ஆசிரியர்) ஆன்மீக சமய நிறுவனங்களும் மேலதிக விவரங்களைப் பெற விரும்புகின்ற ஆர்வலர்களும் இல 692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் அல்லது 077 222 0103 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அலை ஓசை
Singhams Media
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732



# Pearl Island Inn

## Hotel & Restaurant

**Dine - in | Take Away | Soft Drinks**

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com



# நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடையும் போதெல்லாம் ‘ஆபத்பாந்தவராக’ ரணிலே வந்து காப்பாற்றுகின்றாராம்!

## அவரது கட்சியின் எம்.பி. வஜிர அபேவர்த்தன கூறுகின்றார்



**நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அதனை மீட்டு, நாட்டைக் கட்டியெழுப்ப அரசியல் கட்சிகளுக்கு வேலைத்திட்டம் இருக்கமானால் அவர்கள் தற்போதாவது முன்வைத்திருக்கலாம்.**

**ஆனால் அவர்களிடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை. ஆனால் இவர்கள் இனவாதம், மாதவாதத்தை தூண்டி நாட்டைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள்.**

**அதனை மக்கள் தடுக்க வேண்டும். இனவாதம் மதவாதத்தை தூண்டுவதை கட்டுப்படுத்த முடியாமல் போனால் இலங்கைக்கு எதிர்காலம் இல்லாமல் போகும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

வங்குரோத்து அடைந்துள்ள எமது நாடு தற்போது படிப்படியாக பலப்படுத்தப்பட்டு வருகிறது. சரவதேச நாணய நிதியம் நேற்று விடுத்திருந்த குறிப்பொன்றில், செப்டேம்பர் 15ஆம் திகதிக்கும் 27ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மீண்டும் இலங்கைக்கு வந்து, வங்குரோத்து நிலைமையில் இருந்து மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

அதனால் ஊடகங்கள் நாட்டின் நிலைமை தொடர்பில் மக்களுக்கு உண்மை தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்பதற்கு அரசியல் கட்சிகளுக்கு ஏதாவது வழி இருந்தால் அதை முன்வைக்க வேண்டும். ஆனால் அவை எவையும் முன்வைக்கவில்லை.

அதனால் அரசியல் கட்சிகளுக்கு எந்த வழியும் இல்லை என்பது உறுதியாகி இருக்கிறது. என்றாலும் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க ரணில் விக்ரமசிங்கவிடம் தெளிவான தொரு வழி இருந்தமையாலே அவர் முன்வந்து நாட்டைப் பொறுப்பேற்றார்.

அத்துடன் நாட்டின் சுதந்திரத்துக்காக அனைத்து இன மக்களும் ஒன்றாக இருந்து செயற்பட்டமை போல் தற்போது நாட்டின் பொருளாதாரத்தை மீட்கவும் நாங்கள் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்.

நாட்டின் சுதந்திரத்துக்காக ஒன்றிணைந்து செயற்பட்டாலும் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அரசியல் கட்சிகள் காலத்துக்கு காலம் தேர்தல்களின் போது பொய் வாக்குறுதிகளை வழங்கி அதனை செயற்படுத்த முற்பட்டதன் பிரதிபலனாகவே இன்று நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறார்.

பொருளாதாரம் ஸ்திரமடையும் நிலை ஏற்படும் போது இனவாதத்தை தூண்டி, ஆட்சியை வீழ்த்தும் நடவடிக்கை 2000ஆம் ஆண்டில் இருந்து இடம்பெற்று வந்திருக்கிறது. அதனால் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதையும் அதனை எவ்வாறு மீட்கமுடியும் என்பதையும் அரசியல் அனுபத்தால் ரணில் விக்கிரமசிங்க தெரிந்து தெரிந்து வைத்திருக்கிறார்.

அதனால் தான் 2000ஆம் ஆண்டில் நாடு வீழ்ச்சியடையும்போது 2001 டிசம்பர் மாதம் நாட்டை பொறுபேற்று, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நாட்டை முன்னுக்குக் கொண்டு சென்றார்.

ஆனால் மீண்டும் இனவாதத்தை தூண்டி நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்திய நிலையில் 2014 ஆகும்போது நாடு பொருளாதார ரீதியில் மீண்டும் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

அதனால் 2017இல் நடத்த இருந்த ஜனாதிபதி தேர்தலை 2015இல் நடத்தி அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்தார்கள். என்றாலும் 2015 ஜனவரி 8ஆம் திகதி ரணில் விக்ரமசிங்க மீண்டும் நாட்டை பொறுப்பேற்று, நாட்டை முன்னுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துவந்தார். இந்நிலையில்தான், உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் ஒன்றிணைந்து 2019இல் 52 நாள் கலவரம் மற்றும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் வரை இடம்பெற்றன.

எனவே நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அதனை மீட்டு, நாட்டி கட்டியெழுப்ப அரசியல் கட்சிகளுக்கு வேலைத்திட்டம் இருக்குமானால் அவர்கள் தற்போதாவது முன்வைத்திருக்கலாம். ஆனால் அவர்களிடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை.

ஆனால் இவர்கள் இனவாதம். மாதவாதத்தை தூண்டி நாட்டை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். அதனை மக்கள் தடுக்க வேண்டும். இனவாதம் மதவாதத்தை தூண்டுவதை கட்டுப்படுத்த முடியாமல் போனால் இலங்கைக்கு எதிர்காலம் இல்லாமல் போகும்.

அதனால் அனைவரும் இலங்கையர்களாக எமது பிரச்சினைகளை எமது நாட்டுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு தேசிய ஐக்கியம் முக்கியமாகும். – என்றார்.

# இரு லொறிகளில் ஏற்றி வரப்பட்ட 89 ஆடுகள், 16 மாடுகள் சிக்கின

இரு லொறிகளில் சட்டவிரோதமாக 89 ஆடுகள் மற்றும் 16 மாடுகளை ஏற்றி சென்ற 3 சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என அனுராதபுரம் ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் – புத்தளம் பிரதான வீதியின் மஹாபுலங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் .

40 முதல் 50 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் பயணித்த இரு லொறிகளில் ஒன்றில் 89 ஆடுகள் மற்றும் 7 மாடுகள் இருந்தன எனவும் மற்றைய லொறியில் 9 மாடுகள் இருந்தன ர்னவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# இப்போது ஒண்ணுந்தெரியாத பாப்பா போல் சம்பந்தன் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதிப் பகிடி பண்ணுகிறாராம்

## ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் அறிக்கை



(ஏ.எல்.எம்.)

**2017ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் திருத்த சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதை நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தல் நடைபெறாமல் போகத் தமிழ் கூட்டமைப்பின் சுமந்திரனும் மற்றும் ரவூப் ஹக்கீமுமே முன்னின்றனர். ஹக்கீம் கை உயர்த்தியமையைப் பார்த்து ரிஷாத் பதியுதீன் தாமும் கை உயர்த்தினர் எனக் கூறினார்.**



இத்திருத்தம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டு, எல்லை நிர்ணயம் செய்த பின்தான் மாகாணசபைத் தேர்தல் என்ற நிலையை ஏற்படுத்த சம்பந்தனும் சேர்ந்து சதி செய்து விட்டு இப்போது ஒண்ணுந்தெரியாத பாப்பா போல் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிப் பகிடி பண்ணுகிறார்.- இப்படி ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

13ஐ முழுமையாக அமுல்படுத்தி மாகாண சபை தேர்தலை நடத்தும் படி தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருப்பதன் மூலம் மாகாண சபை தேர்தல் நடக்காமைக்கான காரணம் தமிழ் கூட்டமைப்பும் ஹக்கீமும், மனோ கணேசன் போன்றோரும்தான் என்ற உண்மையை மறைத்து நாட்டு மக்களை ஏமாற்ற முயற்சி செய்கிறார் சம்பந்தன்.

13ஐ முழுமையாக அமுல்படுத்தாத நிலையில்தான் 88 ஆம் ஆண்டு முதல் மாகாண சபைத்தேர்தல் நடந்தது என்பது சம்பந்தனுக்குத் தெரியாதா?

13 ஆம் திருத்தச் சட்டப்படிதான் மாகாண சபையே அமுலுக்கு வந்தது. அதன்படியே கிழக்கு மாகாண, வட மாகாண சபை தேர்தல்களின் போது தமிழ் கூட்டமைப்பும் போட்டியிட்டது.

இப்போது மாகாண சபை தேர்தல் நடக்க முடியாமைக்கு யார், என்ன காரணம் என்பது சம்பந்தனுக்கு தெரியாதா என்று கேட்கிறோம்.

"சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்தது போல்" 2017 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் திருத்த சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதை நிறைவேற்றி, மாகாண சபையை ஒழிக்க தமிழ் கூட்டமைப்பின் சுமந்திரனும் ரவூப் ஹக்கீமுமே முன்னின்றனர். ஹக்கீம் கை உயர்த்தியமையைப் பார்த்து ரிஷாத் பதியுதீன் தாமும் கை உயர்த்தினார் எனக் கூறினார்.

இத்திருத்தம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டு எல்லை நிர்ணயம் செய்த பின்தான் தேர்தல் என்ற நிலையை சம்பந்தனும் சேர்ந்து சதி செய்து ஏற்படுத்தி விட்டு இப்போது ஒண்ணுந்தெரியாத பாப்பா போல் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிப் பகிடி பண்ணுகிறார்.

"கண்கெட்ட பின் நமஸ்காரம் என்பது போல்" சுமந்திரனும் பழைய விகிதாசார முறைப்படி தேர்தல் நடத்த கோருகிறார். அவ்வாறாயின் இது விடயம் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டு மூன்றில் இரண்டால் வெற்றிபெற்றால் மட்டுமே தேர்தல் நடத்த முடியும் என்பது ஆயுள்காலம் முழுவதும் நாடாளுமன்றத்தில் இருக்கும் சம்பந்தனுக்கு தெரியாதா?

இன்றைய சூழ்நிலையில் மஹிந்த தரப்பின் ஆதரவின்றி நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு கிடைக்கவே கிடைக்காது. அது வரை மாகாண சபை தேர்தலை நடத்தும்படி ஜனாதிபதியிடம் கோருவது சின்னப்பிள்ளைதனமாகும்.

ஆகவே மாகாண சபை தேர்தல் நடக்காமைக்கும் 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் 2017 ஆம் ஆண்டு தமிழ் கூட்டமைப்பும் சேர்ந்து தேர்தல் திருத்த சட்டம் கொண்டு வந்தமை காரணமாகவே தேர்தல் நடக்காமல் உள்ளது என்பதால் திரு. சம்பந்தன் இதற்காக நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்.- என்றுள்ளது.

***ஆசிரியர் குறிப்பு***

*இந்த அறிக்கையில் ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத் முக்கிய தகவல் தவறு ஒன்றை விட்டிருக்கின்றார். அதைச் சுட்டிக் காட்டுவது அவசியம் என்பதால் இங்கு குறிப்பிடுகிறோம்.*

*மாகாண சபைத் தேர்தலை பழைய - முன்பு நடைமுறையில் இருந்த - மாகாண சபைத் தேர்தல் சட்டங்களின் கீழ் நடத்துவதற்கான தனிநபர் சட்டமூலத்தை முன்னைய நாடாளுமன்றத்திலும் தற்போதைய நாடாளுமன்றத்திலும் சுமந்திரன் எம்.பி. சமர்ப்பித்திருந்தார். முன்னைய நாடாளுமன்றத்தில் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் எவரும் அதைச் சட்ட சவாலுக்கு உட்படுத்தாதமையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், நாடாளுமன்ற விவாதத்திற்கு எடுக்கப்படாமல் காலாவதியானது.*

*தற்போதைய நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் சுமந்திரன் மீளவும் சமர்ப்பித்த அதே தனிநபர் சட்டம் மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கும் சட்டச் சவாலுக்கும் உட்படுத்தப்பட்டு, அதில் உள்ள ஒரு ஷரத்தை மாற்றி அல்லது நீக்கிவிட்டு அதை சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்றினால் அது சட்டமாக முடியும் என்று உயர் நீதிமன்றம் தெளிவாகத் தீர்ப்பளித்து விட்டது*

*ஆகவே, "தேர்தல் நடத்துவதாயின் இவ்விடயம் மீண்டும் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு மூன்றில் இரண்டால் வெற்றி பெற்றால் மட்டுமே தேர்தல் நடத்த முடியும் என்பது ஆயுட்காலம் முழுவதும் நாடாளுமன்றத்தில் இருக்கும் சம்பந்தனுக்கு தெரியாதா?" என்று அப்துல் மஜீத் தமது அறிக்கையில் கேட்பது தவறானது என்பது நாடாளுமன்றப் பக்கமே போகாத அவருக்குப் புரியவேயில்லை என்றே தோன்றுகிறது. (ஆ-ர்)*

# ராகம ரயில் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்

## அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

கொழும்பின் புறநகர் பகுதியான ராகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ராகம ரயில் நிலையத்திற்கு அருகில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை கொழும்பு கோட்டையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த விரைவு ரயிலில் மோதுண்டு இவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில் பாதுகாப்பு கடவை மூடப்பட்டிருந்த நிலையில், ரயில் கடவையை கடக்க சைக்கிளை தள்ளியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இறந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதனால் அடையாளம் காண உதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 35 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர். வெளிர் மஞ்சள் நிற சட்டை மற்றும் கால்சட்டை அணிந்திருந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், ராகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ் மக்களுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

வேண்டும். சீனியோ, சக்கரையோ இப்பொழுது எமக்கு தேவையில்லை.” எனக் காட்டமாகத் தெரிவித்துள்ளார் ரெலோ அமைப்பின் பிரமுகர் விந்தன் கனகரட்ணம்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

செல்வம் அடைக்கலநாதன் கோரித்தான் வவுனியா சீனி தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிட்டத்தட்ட ஐந்து லட்சம் மக்களின் முன்பாக மடு தேவாலயத்தில் தெரிவித்துள்ளார்.

நான் 39 வருடங்களாக ரெலோ அமைப்பில் இருக்கிறேன். தலைவர் ஸ்ரீ சபாரட்ணம் தலைமையில் இந்த நாட்டுக்காக எனது உயிரை, உடலை, அர்ப்பணித்துப் போராட புறப்பட்டிருந்தேன். பின்னர் ஜனநாயக வழியில் போராட தள்ளப்பட்டுள்ளோம். எமது போராட்ட வடிவம் மாறினாலும், எமது இலக்கு தமிழீழம் என்பதிலிருந்து மாற்றமடைந்திருந்தாலும், வடக்கு – கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கிறோம்.

கைத்தொழில், மீன்பிடி, தொழிற்துறை அமைச்சராக ஜி.ஜி.பொன்னம்பலம் செயற்பட்டிருந்தார். அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்த அவர் அரசாங்கத்தில் இணைந்து விட்டார் எனத் தந்தை செல்வா சுயாட்சி கோரிக்கையுடன் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

ஆனால் அன்று ஜி.ஜி.பொன்னம்பலம் கொண்டு வந்த சீமெந்து தொழிற்சாலை எப்படியிருக்கிறது? கந்தளாய் சீனித் தொழிற்சாலை எப்படியிருக்கிறது? சீனித் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதுடன், முழுவதும் தமிழ் மக்கள் வாழ்ந்த அந்த பகுதி சிங்கள பகுதியாகிவிட்டது. வாழைச்சேனை காகித தொழிற்சாலைக்கு என்ன நடந்தது? ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலைக்கு என்ன நடந்தது?

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் இயங்குகிறதா? ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் இயங்குகிறதா? அல்லைப்பிட்டி அலுமினிய தொழிற்சாலை இயங்குகிறதா? மண்டைதீவு மீன் தூள் ஆலை இயங்குகிறதா?

ஒரு சலுகை அடிப்படையில் அமைச்சராகினார். இப்பொழுது அனைத்துத் தொழிற்சாலைகளும் அழிந்து கிடக்கின்றன.

எமக்கு நிரந்தர தீர்வு கிடைக்காமல் அபிவிருத்தியென்பது நிலைத்து நிற்குமா என்ற கேள்வி அனைவரிடமும் உள்ளது.

இன்று கோயில்களைத் தக்க வைக்கப் போராடுகிறோம். குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, கன்னியா வெந்நீர் ஊற்று, தையிட்டி, பறாளாய் முருகன் கோயில், மண்டைதீவில் கடற்படை ஆக்கிரமிப்பு என பாதுகாப்புத் தரப்பின் உதவியுடன் பிக்குகள் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் எமக்கு ஒரு தீர்வு வரவில்லை. என்ன கொள்கைக்காக, இலட்சியத்துக்காக புறப்பட்டோமோ அதில் ஒரு துளியை கூட அடையவில்லை. ஏற்கெனவே கொண்டு வந்த தொழிற்சாலைகள் அழிந்து, இரும்பு திருட்டு நடந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலில் நிரந்தர தீர்வில்லாமல் அபிவிருத்தி, முதலீடு எந்த வகையில் எமக்கு சாத்தியப்படும்? இப்பொழுது எமக்குத் தேவை சீனியோ, சர்க்கரையோ அல்ல. எமக்கு தேவை விடுதலை.

மேர்வின் சில்வா வாளுடன் வருவதற்கு தயாராகிறார். அவருக்குப் பாதுகாப்புக் கொடுக்க பாதுகாப்புத் தரப்பு தயாராக இருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் ரணிலிடம் போய் சீனி கேட்பது சரியல்ல. அதுவல்ல எமது பிரச்சினை. காணாமல் போனவர்களிற்கு, அரசியல் கைதிகளுக்கு தீர்வில்லாமல் உள்ளது. நாளாந்தம் சிங்களக் குடியேற்றம் நடக்கிறது. இவைதான் எமது பிரச்சினை. எமது கொள்கை தவறாமல் பயணிக்க வேண்டும். 3 இலட்சம் மக்களைப் பலி கொடுத்துள்ளோம். 50 ஆயிரம் போராளிகளை மண்ணுக்குள் விதைத்துள்ளோம்.

சரி, பிழைகளுக்கு அப்பால் மக்களின் விடுதலைக்காக எம்மை உருக்கிக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம். ஐ.நா. தீர்மானங்களுக்கு அரசு அடிபணியவில்லை. இந்த நிலையில் எமக்கு சீனியா முக்கியம்? எமது விடுதலையே முக்கியம்.

இனப்பிரச்சினை தீர்ந்து, எம்மை நாமே ஆளும் போது ஏராளம் தொழிற்சாலைகள் தானாக வரும். புலம்பெயர் தமிழர்கள் தாராளமாக முதலிடுவார்கள்.

கடந்த 2 மாதங்களாக சீனித்தொழிற்சாலை பற்றியே பேச்சாக உள்ளது. எமது 39 வருட போராட்ட வாழ்க்கையில் எமது கட்சிக்கு கிடைத்த பெரும் அவமானமாக இந்தக் காலப்பகுதியைப் பார்க்கிறேன். ஊடகங்கள் இதுவரை எழுதியவையெல்லாமே நேற்று மெய்யாகி விட்டன. ஊடகங்கள் பொய் சொல்கின்றன என்ற கருத்தும் இருந்தது. ஆனால் நேற்று அனைத்தும் உண்மையாகி விட்டது.

தனிநாடு கேட்டோம், சுயாட்சி கேட்டோம் இப்பொழுது சீனி தொழிற்சாலையா கேட்கிறோம். இதுவா எமது பிரச்சினை?

ஊடகங்களில் இந்த விவகாரம் வந்த போது உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தோம். ஏனெனில், இது எமது கட்சி. தலைவர் சிறிசபாரத்தினம் எங்களை நம்பி விட்டுவிட்டு சென்ற கட்சி. எமக்கு கடமை, பொறுப்பு உணர்வுள்ளது. எமக்கும் தன்மானமுள்ளது. தலைவர்கள் குட்டிமணி, தங்கத்துரை உருவாக்கிய கட்சி. தலைவர் பிரபாகரனும் எம்முடன் தான் இருந்தார். தலைவர்கள் என்ன கொள்கைக்காக மரித்தார்களோ, அதை நாம் கைவிட முடியாது. அற்ப சொற்ப சலுகைகளுக்காக அரசிடம் கையேந்த முடியாது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நல்லாட்சியில் விழுந்து விழுந்து ரணிலைக் காப்பாற்றினார்கள். நீதிமன்றமும் சென்றார்கள். ஆனால் அரசியல் கைதிகள் நிரந்தரமாக விடுவிக்கப்படவில்லை. பிள்ளைகளைத் தேடும் தாய்மாருக்குப் பதில் கிடைக்கவில்லை.

சீனித் தொழிற்சாலை தொடர்பாக பத்திரிகையில்தான் பார்த்து தெரிந்து கொண்டேன். உடனே வவுனியா மாவட்ட கட்சி அமைப்பாளர், முக்கியஸ்தர்களை தொடர்பு கொண்டு கேட்டேன். அவர்கள் யாருக்கும் இதைப்பற்றி தெரிந்திருக்கவில்லை. முதலாவது கட்சியின் வவுனியா கிளைக்கு அதைப்பற்றி தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். அடுத்ததாக வவுனிய பொது அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள், மக்களைச் சந்தித்து இதைப்பற்றியெல்லாம் பேசியிருக்க வேண்டும். நீர், நிலம், காட்டுக்கு ஆபத்தில்லாமல் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தலாமா என ஆராய வேண்டும். அனைத்தும் நடந்தால் கட்சியின் தலைமைக் குழுவில் சமர்ப்பித்து அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் இதுவரை அப்படி நடக்கவில்லை.

2016ஆம் ஆண்டு செல்வம் அடைக்கலநாதன் இந்த திட்டத்தை முன்வைத்த போது அப்போதைய வடக்கு மாகாண சபையினால் அது நிராகரிப்பட்டது. சுற்றாடல் காரணங்களினால் அது நிராகரிக்கப்பட்டது.

மத்திய அமைச்சரவையில் 4 முறை அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர்தான் இந்த திட்டத்தின் பின்னணியில் ரெலோ உள்ளதை அறிந்தோம். ரெலோவின் செயலாளர் ஜனா, உபதலைவர்கள் ஹென்றி மகேந்திரன், இந்திரகுமார் பிரசன்னா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கத்திற்கும் கூட இந்த விவகாரம் தெரியாது. எனக்கும் தெரியாது. இதை நாம் கட்சிக்குள் ஒரு விடயமாக எடுத்தோம்.

தமிழ் அரசு கட்சி, புளொட் கட்சியின் பிரமுகர்கள், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன அதை எதிர்த்தன. இந்தத் திட்டம் பற்றி கட்சிக்குள்ளும், பங்காளிக் கட்சிகளுக்கும் தெரிந்திருக்கவில்லை.

இந்தத் திட்டம் நிறைவேறுமா என்ற சந்தேகமும் உள்ளது. அடைக்கலநாதன் கேட்ட திட்டத்தை அங்கீகரித்துள்ளார் எனச்ஜனாதிபதி நேற்றுப் பேசினார். அடைக்கலநாதன் இதுவரை அப்படி சொல்லவில்லை. யாரோ கொண்டு வந்த திட்டத்தை தாம் ஆதரித்ததாகவே கூறினார். யாரும் இதில் குத்திமுறியத் தேவையில்லை, இது மக்களுக்கு தேவையில்லையென்றால் கைவிடுவோம் என்றார். மக்கள் இந்த திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். அதற்கு காரணம், திட்டத்தின் ஆரம்பம் பிழையாக அமைந்தது. இதனால் மக்களிற்கு சந்தேகம் எழுந்தது.

இந்த விவகாரத்தில் பல கோடி ரூபா தரகுப்பணம், கையூட்டு பரிமாறப்பட்டதாக செய்தி வெளியாகியிருந்தது. இதனால் மக்களிடம் எதிர்ப்பு வலுத்தது. இவர்களின் பிழையான அணுகுமுறைதான் திட்டத்திற்கு எதிர்ப்பு ஏற்பட காரணம்.

சீனித்தொழிற்சாலை திட்டத்துக்கு துறைமுக நகர திட்டத்திற்கு ஈடான பணம் முதலிடப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டது. தாய்லாந்து அவ்வளவு பணம் செலவழிக்குமா என்பது சந்தேகம். இது சீனாவின் திட்டமென்கிறார்கள். இதற்கான விளக்கத்தை ஏற்பாட்டாளர்கள்தான் கொடுக்க வேண்டும். – என்றார்.

# கொழுந்து பறிக்கவும், சோழர்களுடனும் வந்தோர் நாட்டைப் பிரிக்க இடமளியோம்

## மீண்டும் முழங்குகின்றார் மேர்வின் சில்வா



கொழுந்து பறிப்பதற்காக மலையகம் வந்த தமிழர்களுக்காகவும், சோழர்களுடன் வடக்கு மற்றும் கிழக்குக்கு வழந்த தமிழர்களுக்காகவும் நாட்டை பிளவுப்படுத்த இடமளிக்க முடியாது.

இது சிங்கள பௌத்த நாடு. பௌத்தர்கள் விரும்பும் இடங்களில் வாழலாம் என குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்தத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்தால் அப்பகுதியில் வாழ்பவர்களின் தலைகளை கொய்வேன் என்று குறிப்பிட்ட கருத்தை நீக்கிக் கொள்ளமாட்டேன், முடிந்தவர்கள் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யலாம். டயஸ்போராக்களின் நோக்கத்துக்கமைய அரசாங்கம் செயற்பட்டால் என் தலைமையில் மீண்டும் போராட்டத்தை தோற்றுவிப்பேன் எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:–

இலங்கை சிங்கள, பௌத்த நாடு. பௌத்தர்கள் எங்கும் வாழலாம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சிங்களவர்கள் வாழ்வதற்கும், விகாரைகள் அமைப்பதற்கும் தமிழ் அரசியல்வாதிகளிடமும், தமிழ் அதிகாரிகளிடமும் அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை.

தென்னிந்தியாவில் இருந்து கொழுந்து பறிப்பதற்காகவே மலையகத்துக்கு தமிழர்கள் அழைத்து வரப்பட்டார்கள். மறுபுறம் சோழர்களுடன் வந்த தமிழர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழந்தார்கள்.

அரச காலத்தில் இலங்கையில் இருந்த பெண்கள் அழகில்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு சிங்கள அரசர்கள் தென்னிந்தியாவில் இருந்து தமிழ் இளவரசிகளை திருமணம் முடித்து நாட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

தமிழ் இளவரசிகளுக்காக சிங்கள மன்னர்கள் கோயில்களை கட்டிக் கொடுத்தார்கள். இவ்வாறான பின்னணியில் தான் தமிழர்கள் இலங்கையில் வாழ ஆரம்பித்தார்கள். பிற்பட்ட காலங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொன்மையான விகாரைகள் அழிக்கப்பட்டு அதன் மீது கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே தற்போது கோயில்களை இடிக்க வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் குறிப்பிடவில்லை.

தமிழர்கள் சிங்கள பௌத்தர்களுடன் முரண்பாடு இல்லாமல் நல்லிணக்கத்துடன் வாழலாம்.அதை எதிர்க்கவில்லை. ஆனால் பௌத்த மரபுரிமைகளை அழித்து இங்கு வாழ முடியாது. ஏனெனில் இது சிங்கள பௌத்த நாடு. கொழுந்து பறிப்பதற்காக மலையகம் வந்தவர்களுக்காகவும், சோழர்களுடன் வந்தவர்களுக்காகவும் நாட்டை பிளவுப்படுத்த முடியாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்கள் விகாரைகள், மகா நாயக்கர்கள் மீது கை வைத்தால் அவர்களின் தலைகளுடன் களனிக்கு வருவேன் என்று குறிப்பிட்டதை ஒருபோதும் நீக்கிக் கொள்ளமாட்டேன். எனக்கு எதிராக எவரும் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

டயஸ்போராக்களின் நோக்கத்துக்கு அமைய அரசாங்கம் செயற்பட்டால் அரசாங்கத்துக்கு எதிராக நான் அரகலயவில் (போராட்டம்) ஈடுபடுவேன். பௌத்தத்தின் மீது பற்றுள்ளவர்கள் என்னுடன் இணைந்துக் கொள்ளலாம். – என அழைப்பு விடுத்தார் மேர்வின்.

### மக்களைக் கொல்லும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சி ஒன்றியத்தின் வாராந்தச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

”13 ஆவது திருத்தம் தொடர்பில் அரசு கலந்துரையாடிய போதிலும் முறையான மொழிக்கொள்கையை ஏற்றுக்கொள்ளத் தவறியுள்ளது. இப்படியான பொய்யான, மோசடி அரசியல் சூதாட்டத்தில் ஈடுபடும் அரசுடன் இணைந்துகொள்ள நாங்கள் தயாராக இல்லையென்றாலும், நாட்டுக்குச் சாதகமான மற்றும் சரியான முடிவுகள் எடுக்கப்படும் இடத்தில் பதவிகள், சலுகைகளை நிராகரித்து சரியான நிலைப்பாட்டில் நிற்கின்றோம்.

நாடு தற்போது மக்கள் ஆணையற்ற, நம்பிக்கையற்ற, அங்கீகாரம் இல்லாத ஜனாதிபதி தலைமையிலான அரசால் ஆளப்படுகின்றது. நாட்டையே வங்குரோத்தாக்கிய கும்பலை வைத்து அரசியல் நாடகம் ஆடி குழுவாத பூசல்களை உருவாக்கி நாட்டின் தேச நலனைக் கருதாமல், தங்கள் தனிப்பட்ட பேராசையின் அடிப்படையில் பதவிகள் மற்றும் சலுகைகளுக்குப் பேராசை கொண்ட கொள்கையற்ற ஆட்சியை நாட்டில் நடத்தி வருகின்றனர்.

உழைக்கும் மக்களுடனே ஐக்கிய மக்கள் சக்தி உள்ளது. எனவே, ஊழியர் சேமலாப நிதியங்களில் கை வைத்துள்ள அரசுடன் உடன்பாடுகளை எட்ட முடியாது.

தீர்வுகளைத்தேடும்முற்போக்கானஎதிர்க்கட்சி என்ற வகையில் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக முன்னிற்கின்றோம். மக்கள் ஆணைக்குப் புறம்பாக எந்தப் பதவியையும் சலுகைகளையும் ஏற்க நாங்கள் தயாராக இல்லை.” – என்றார்.

### அடிப்படை அறிவற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

– இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க படிப்படியாக நிறைவேற்றி வருகின்றார். அதேபோல் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் முழுமையாக அமுல்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

இந்நிலையில், 13 தொடர்பில் முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து முட்டிமோதுவதை ஆளும் – எதிரணி எம்.பிக்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்.”

– என்றார்.



# தமிழ் எம்.பிக்கள் - ஜனாதிபதி சந்திப்பு

# நல்லிணக்கத்தை எட்டுவதற்கான முயற்சி

## பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை மடுவில் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித் துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பு போன்ற முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்டுவதற்கு அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம்.

இவ்வாறு பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மடு திருத்தலத்தின் ஆவணி திருவிழாவில் நேற்று (15) கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில் தெரிவித்துள்ளவை வருமாறு-

உடல் ரீதியான உணர்வு ரீதியான வடுக்களை விட்டுச் சென்ற உள்நாட்டு போரின் தாக்கங்களை நாம் மறந்து விட முடியாது. பல தடவைகளில் இந்த போரைப் பற்றி நான் கேள்விப்பட்டு இருக்கின்றேன்.வாசித்தும் இருக்கின்றேன். எனினும் 2 வாரங்களுக்கு முன்னர் யாழ் . மறை மாவட்டத்துக்கு நான் மேற்கொண்டிருந்த மீட்புப்பணி விஜயத்தின் போது மக்கள் மீதும், கைவிடப்பட்ட வீடுகள் மீதும், உடமைகள் மீதும் போரின் தாக்கம் எவ்வாறு இருந்தது என்பதை இன்னும் ஆழமாகப் பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

மீண்டும் ஒரு போர் வேண்டாம். இன,மத,மொழி,சாதி கருத்து போன்ற வேற்றுமைகளுக்கு அப்பால் அன்பும், அமைதியும் சகிப்புத்தன்மையும் நிலை பெறுவதாக.

வெறுப்பும், விரோதமும் வேண்டாம். ஏனெனில் சமாதானம் என்பது இல்லாத நிலை அன்று. இது நல்லிணக்கத்துக்கான நேரம்.வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பயணங்கள் வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு போன்ற முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்டுவதற்கு அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம்.

அதேவேளை, ஒரு வாரத்துக்கு முன்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெளிவாக

> **மூன்று வருடங்களுக்கு முன் நான் இலங்கைக்கு வந்த போது இந்த நாட்டின் பல பாகங்களுக்கும் நான் விஜயம் செய்தேன். இலங்கை மக்கள் பொதுவாக நல்லவர்கள். சகிப்புத்தன்மை கொண்டவர்கள். குறைவாக உள்ள சிறு குழுவினர் உங்கள் மீது எதிர் மறையாக செல்வாக்கு செலுத்தவோ, உங்களை திசை திருப்பவோ அனுமதிக்க வேண்டாம்.**

குறிப்பிட்டது போல் அனைவரும் நன்கு அறிந்த குழப்பமான விடயங்களைப் போதுமான அளவில் தீர்த்து வைக்கும் வகையில் இந்த செயன்முறைகள் அமையும் என்று நாங்கள் நம்புகிறோம்.

மூன்று வருடங்களுக்கு முன் நான் இலங்கைக்கு வந்த போது இந்த நாட்டின் பல பாகங்களுக்கும் நான் விஜயம் செய்தேன். இலங்கை மக்கள் பொதுவாக நல்லவர்கள். சகிப்புத்தன்மை கொண்டவர்கள். குறைவாக உள்ள சிறு குழுவினர் உங்கள் மீது எதிர் மறையாக செல்வாக்கு செலுத்தவோ, உங்களை திசை திருப்பவோ அனுமதிக்க வேண்டாம்.

பல்வேறு சமயங்களை சார்ந்த சமைத்தலைவர்கள் அன்பையும், சகோதரத்துவத்தையும் நோக்கிய சரியான கொள்கையை நோக்கி மக்களை வழி நடத்துவதில் முன்னனி பங்கு வகிக்க வேண்டும்.

எந்த ஒரு சமையத்தலைவரும் தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள், மதிப்பு ,சலுகைகள் போன்றவற்றை பயணபடுத்தி மற்றைய சமையங்களை இழிவு படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாம் முன்னுதாரணமாக திகழ்ந்து வழிநடத்த வேண்டும். நாம் ஒன்றிணைப்பின் முகவர்களாக திகழ வேண்டுமே தவிர பிரிவினை வாதத்தின் முகவர்களாக அல்ல.

இந்தத் திருப்பலியில் கலந்து கொள்ளும் சகோதர சகோதரிகளே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பெயரால் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். திருத்தந்தை உங்கள் நாட்டை அன்பு செய்கிறார். 2015 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி திருத்தந்தை இந்த நாட்டுக்கும் இத்திருப்பதிக்கும் மேற்கொண்ட திருத்தூது பயணத்தை அவர் மிகவும் பாராட்டுகின்றார்.

அன்றைய நாளில் அவருக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட மடு மாத திருச் சொரூபத்தை அவர் இன்று வரை போற்றுகின்றார்.உலகம் போற்றும் இத் திருத்தலத்தில் அன்று அவர் ஆற்றிய உரையை நோக்கி இன்று எனது சிந்தனைகள் செல்கிறது.

ஒரு அமைதியான இருப்பை நோக்கி திரும்புவதற்கு நாடுகின்ற அனைவரினதும் அன்னை. பிரகாசிக்கின்ற இந்த இலங்கைத்தீவில் உள்ள தன் பிள்ளைகளை அவர் ஒருபோதும் மறக்கவில்லை.

எவ்வாறு மரியா சிலுவையில் தொங்கிய தனது பிள்ளையை விட்டு விலகாது நின்றாறோ அவ்வாறே துன்புறும் தனது இலங்கை நாட்டு பிள்ளைகளை அவர் விட்டு விலகுவது இல்லை.

நம்முடைய பரிசுத்த தாயான மரியா தன்னுடைய இத்தீவின் பிள்ளைகளை மறப்பதில்லை.அவரின் பரிந்துரை ஊடாக நீதி,நல்லிணக்கம்,அமைதி எங்களுக்கு கிடைப்பதாக. - என்றார்.









# திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி தீர்த்தோற்சவம்

**(வடிவேல் டினேஸ்)**

வரலாற்று பிரசித்தி பெற்ற அம்பாறை – திருக்கோவில் சித்திர வேலாயுதசுவாமி ஆலய ஆடி அமா வாசை தீர்த்தோற்சவம் நேற்று (16) சிறப்பாக இடம் பெற்றது.

பிதுர்கடன் செய்வதற்கு ஏற்ற இரண்டு அமாவாசைகள் வரும் ஆடி மாதத்தில் ஆடி அமாவாசை விரதமி ருந்து பிதுர்கடன் செலுத்தும் பிண்டம் கரைக்கும் நிகழ்வுகளும் ஆலய வளா கத்தில் இடம்பெற்றன.

அறுகம்புல், மஞ்சள், நெய் என்பன சேர்த்து சுமங்கலி பெண்களால் "சுண்ணம்" இடிக்கப்பட்டு மூல மூர்த்தி உட்பட பரிவார மூர்த்திகளுக்கு பூசைகள் இடம்பெற்றன.

இதன் பின்னர் முருகப்பெருமானின் புனித வேலுக்கு ஆலய முன்றலில் அபிஷேகம் இடம் பெற்று தொடர்ந்து 'கடல் கட்டல்' இடம் பெற்று, ஆயிரக் கணக்கான பக்கர்கள் புடைசூழ திருக் கோவில் சித்திரவேலுயுத சுவாமிக்கு வங்கக்கடலில் தீர்த்தோற்சவம் இடம் பெற்றது.

இன்றைய தீர்த்தோற்சவ நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங் அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வின் செயலாளர் கலாநிதி எம். கோபால ரத்தினம், திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், உப பிரதேச செயலாளர் சதிசேகரன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் அதிசய ராஜ் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமான இவ்வாண்டுக் கான உற்சவம் இன்று (17) இடம் பெறும் பூங்காவனத் திருவிழா, நாளை (18) இடம்பெறும் வைரவர் பூசையுடன் நிறைவுபெறும்.







# சீரற்ற வானிலையால் தொடரும் மண்சரிவு: இமாச்சல், உத்தராகண்டில் 60 பேர் பலி!



கடந்த சில நாட்களாக இந்தியாவின் இமாச்சலப் பிரதேசத்தில் மீண்டும் கனமழை பெய்துவருவதாலும், அடுத்த டுத்த மண்சரிவுகள் ஏற்பட்டுள் எதாலும் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இமாச்சலில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது. தொடர்ச்சியாக ஏற்படும் நிலச்சரிவு காரணமாக உத்தராகண்ட், இமாச்சலில் இதுவரை 60 பேர் உயிரிழந்துள்ளனர்.

தென் மேற்கு பருவமழை தொடங்கிய திலிருந்தே வட மாநிலங்களில் கனமழை கொட்டித் தீர்த்தது. டில்லியில் வரலாறு காணாத மழை பெய்தது. உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ஹரியாணா, பிஹார் எனப் பல மாநிலங்கள் வெள்ளத்தில் தத்தளித்தன. மழை வெள்ளம், நிலச்சரிவு, வீடுகள் இடிந்தது விழுந்த சம்பவம், மின்சாரம் பாய்ந்த சம்பவங்கள், மின்னல் தாக்கிய சம்பவங்கள் என வட மாநிலங்களில் உயிரிழப்புகள் ஏற்பட்டன. இமயமலையில் அமைந்துள்ள மாநிலங்களான இமாச்சலப் பிரதேசமும், உத்தராகண்ட் மாநிலமும் பருவமழையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக இமாச்சலப் பிரதேசத்தில் கனமழை பெய்து வருகிறது. இடி மின்னல் தாக்கம், மண்சரிவுகள், வீதி போக்குவரத்து துண்டிப்பு என மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது. உத்தராகண்டிலும் இதே நிலைதான் நீடிக்கிறது. மாநில, தேசிய பேரிடர் மீட்புக் குழுக்கள் மீட்புப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. கனமழை காரணமாக மாணவர்களின் நலன் கருதி இமாச்சலப் பிரதேசத்தில் நேற்று பாடசாலைகளுக்கும், கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள 14 மாவட்டங்களில் 12 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மாண்டி மாவட்டம் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளது. இமாச்சலில் சம்மர் ஹில் பகுதியில் நேற்று முன்தினம் மீண்டும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் 13 பேரில் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 21 பேர் சிக்கியிருக்கலாம் எனக் கூறப்பட்ட நிலையில் 13 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இரு மாநிலங்களிலுன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக அதிகரித்துள்ளது.

இமாச்சலப் பிரதேசத்தில் மண்சரிவு களால் 9,600 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. கடந்த 3 நாட்களில் மாத்திரம் இயல்பைவிட 157 சதவீதம் அதிகம் மழை பெய்துள்ளது.

மழையால் துண்டிக்கப்பட்ட 1220 வீதிகளில் 400 வீதிகள் மறுசீரமைக் கப்பட்டுவிட்டன. ஆனால், தொடர்ந்து மழை பெய்வது மீண்டும் மீண்டும் புதிய சவால்களைக் கொண்டு வருகிறது என்று முதல்வர் சுக்வீந்தர் சிங் சுகு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், அடுத்த இரண்டு நாட்களுக்கு இமாச்சலப் பிரதேசத்தில் ஆங்காங்கே கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. உத்தராகண்ட் மற்றும் வடகிழக்கு இந்தியாவில் அடுத்த 4 முதல் 5 நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று எச்சரித்துள்ளது.

# இந்திய - சீன இராணுவப் பேச்சுவார்த்தை: எல்லைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு!

இந்திய – சீன ராணுவத்துக்கு இடையே கார்ப்ஸ் கொமாண்டர் அளவில் நடைபெற்ற 19 ஆவது சுற்று பேச்சுவார்த் தையில், எல்லைப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்திய – சீன ராணுவத்துக்கு இடையே கடந்த 13 மற்றும் 14 திகதிகளில் கார்ப்ஸ் கொமாண்டர் அளவில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்திய எல்லையில் உள்ள சுல்– மோல்டோ எல்லை சந்திப்புப் புள்ளியில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதையடுத்து, கூட்டறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.



மேற்குப் பிராந்தியத்தில் எல்.ஏ.சி. பகுதியில் இன்னும் தீர்க்கப்படாமல் மீதமுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இரு தரப்பினரும் நேர்மறையான, ஆக்கபூர்வமான மற்றும் ஆழமான விவாதம் நடத்தப்பட்டுள்ளது.

தலைமை வழங்கிய வழிகாட்டுதலுக்கு இணங்க, அவர்கள் வெளிப்படையான, முன்னோக்கிச் செல்லக்கூடிய விதத்தில் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. மீதமுள்ள பிரச்சினைகளை விரை வான முறையில் தீர்ப்பதற்கு ஏற்ப, இராணுவ மற்றும் இராஜதந்திர வழிகள் மூலம் பேச்சுக்களைத் துரிதப் படுத்த ஒப்புக்கொள்ளப்பட்டது. இடைப்பட்ட காலத்தில், எல்லைப் பகுதிகளில் அமைதி நிலைநாட்ட இரு தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளது என்று அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோதலுக்கு தயாராகும் அசர்பைஜான்-ஆர்மீனியா!



சர்ச்சைக்குரிய நகோர்னோ-கராபக் பிராந்தியத்துடன் வீதிப் போக்குவரத்தை அசர்பைஜான் படையினர் முடக்கியுள் ளதால், அந்த நாட்டிற்கும் அண்டை நாடான ஆர்மீனியாவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிப்பது குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டம் நேற்று நடைபெறுகிறது.

சோவியத் யூனியனின் முன்னாள் உறுப்பு நாடுகளான ஆர்மீனியாவிற்கும் அசர்பைஜானுக்கும் இடையே நீண்ட காலமாக எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது.

ஆர்மீனியப் பழங்குடியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகோர்னோ-கராபக் பிராந்தியம், அசபைஜானின் ஓர் அங்கமாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருந்தாலும், கடந்த 1994-ஆம் ஆண்டு போருக்குப் பிறகு அந்தப் பகுதி ஆர்மீனியா ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சர்ச்சைக்குரிய அந்த பிராந்தியத்தில் ஆர்மீனியாவும், அசர்பைஜானும் தங்களது படைகளைக் குவித்துள் ளன. இதனால், இரு தரப்பினரும் அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு வரு கின்றனர்.

நகார்னோ-கராபக் பிராந்தியத்தில் இரு நாட்டுப் படையினருக்கும் இடையே கடந்த 2020-இல் நடைபெற்ற 6 வாரப் போரில் 6,600-க்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## அமெரிக்க இராணுவ சிப்பாய் தொடர்பில் வட கொரியாவின் வெளியிட்டுள்ள தகவல்!






அமெரிக்க இராணுவத்தில் எதிர்நோக்கிய இனப்பாகுபாடு காரண மாகவே அமெரிக்க சிப்பாயான டிராவிஸ் கிங் கடந்த மாதம் தமது நாட்டின் எல்லைக்குள் நுழைந்தார் என வட கொரியா தெரிவித்துள்ளது.

தென் கொரியாவிலுள்ள அமெரிக்க படையில் கடமையாற்றிவந்த 23 வயதான குறித்த சிப்பாய், கடந்த ஜூலை 18 ஆம் திகதி சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருந்த போது வட கொரிய எல்லைக்குள் நுழைந்தார்.

அவர் வடகொரியாவில் தஞ்சம் கோரியதாக வடகொரிய அரச ஊடக மொன்று தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் வடகொரியாவிடமிருந்து உரிய பதில்கள் கிடைக்கவில்லையென அமெரிக்கா வின் பென்டகன் முன்னதாக கூறியது.

இந்தநிலையில், முதல் தடவையாக வட கொரியா, அமெரிக்க இராணுவ சிப்பாய் டிராவிஸ் கிங் தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், எல்லைப் பகுதியிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் படையினது உதவியுடன் டிராவிஸ் கிங்கின் விடுதலை குறித்து பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

வட கொரியவிடமிருந்து இன்றைய தினம் கிடைத்த அறிக்கைக்கு பதில ளித்த பென்டகன் அதிகாரி ஒருவர், ட்ராவிஸ் கிங்கை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வருவதே தமது முன்னுரிமை என தெரிவித்துள்ளார்.

## லிபியாவில் மோதல்கள்: 27 பேர் பலி!

லிபிய தலைநகர் திரிபோலியில் இரண்டு ஆயுதக் குழுக்களுக்கு இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 27 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் இந்த துப்பாக்கிச் சண்டையில் 106 பேர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு அவசர மருத்துவ உதவி பிரிவு அறிவித்துள்ளது.

2011 இல் முயம்மர் கடாபி அகற்றப்பட்டதிலிருந்து அதிகாரத்திற்காக போட்டியிட்ட எண்ணற்ற போராளி குழுக்களில் இரண்டான 444 படைப்பிரிவுக்கும் அல்-ராடா அல்லது சிறப்புத் தடுப்புப் படைக்கும் இடையில் மோதல் ஆரம்பமாகியுள்ளது.

தலைநகரின் தெற்கு புறநகர்ப் பகுதிகளில் உள்ள முன் வரிசைப் பகுதிகளிலிருந்து மொத்தம் 234 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டதாகவும், காயமடைந்தவர்களை சிகிச்சைக்கு உட்படுத்தி வருவதாகவும் அவசர மருத் துவ உதவி பிரிவு அறிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 17.08.2023




இன்று ஆன்மீக நிகழ்வுகள் மற்றும் சொற்பொழிவுகளில் பங்கு கொண்டு ஆறுதல் பெறுவீர்கள். பிரார்த்தனையில் ஈடுபடுவது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

பணியிடச் சூழல் பதட்டத்தை அளிக்கும். பணியிடத்தில் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதன்படி உங்கள் பணிகளை திட்டமிடுங்கள்.

சாதகமான சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்யவேண்டும். இதனால் துணையை நட்புடன் அணுக முடியும். மகிழ்ச்சியாக இருக்க உங்கள் துணையின் விருப்பபடி செயலாற்றுங்கள்.

பண இழப்பு ஏற்படாமல் இருக்க கவனம் தேவை. பணத்தை சாதுரியமாக செலவு செய்யவும்.

பதட்டம் காரணமாக முதுகு வலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் பதட்டப்படாமல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். இன்று உங்கள் செயல்களை ஒருமுகப்படுத்தி கவனமாக செய்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதட்டம் காரணமாக பணி வளர்ச்சியில் தாமதம் காணப்படும். பொறுமையுடன் பணிகளை கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் அதிக நெருக்கம் காணப்படும். சமநிலையோடு இருப்பீர்கள். இதனால் நல்ல மன நிலையில் இருப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் கவலையை அளிக்கும்.

தொண்டை ஒவ்வாமையால் பாதிக்கப்படுவீர்கள்.




இன்று உங்கள் முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். நீங்கள் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். உங்களின் இந்த மனப்பான்மை உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் பணியில் வெற்றி எளிதாக கிடைக்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

பாதுகாப்பற்ற உணர்வு காரணமாக உங்கள் ததுணையிடம் பதட்டத்தை வெளிப்படுத்துவீர்கள். எனவே மனதை அமைதியாக வைத்து மகிழ்ச்சியோடு இருங்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். எதிர்காலத்திற்காக அதிக அளவில் சேமிக்க இயலும்.

மன நிறைவாக உணர்வதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று ஓய்வாக அமைதியாக இருக்க வேண்டிய நாள். உங்களை அதிகமாக வருத்திக் கொள்ள வேண்டாம். முக்கிய முடிவுகளை தள்ளிப்போடவும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணிகளை திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி செயலாற்ற வேண்டும்.

இன்று உங்களிடம் பாதுகாபற்ற உணர்வு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். திட்டமிட்டு அதன்படி செலவு செய்ய வேண்டும்.

மன வருத்தங்கள் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. தியானம் மேற்கொள்வது மிகச் சிறந்தது.




இன்று மிதமான பலன்களே காணப்படும். நண்பர்கள் கூட எதிரிகள் ஆகும் சூழ்நிலை உருவாகும். உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருங்கள்.

அதிக வேலைகள் மற்றும் பொறுப்புகளை சுமையாக உணர்வீர்கள். பணிகளை உறுதியுடன் மேற்கொள்வது நல்லது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது அமைதியையும் நல்லிணக்கத்தையும் பாதிக்கும்.

வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிப்பது நல்லது.

கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




பதட்டம் காரணமாக இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். பாடல் கேட்பது திரைப்படம் பார்த்தல் போன்ற வற்றின் மூலம் மகிழ்ச்சி காணலாம்.

பணிகளை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். அதற்கேற்ற படி திட்டமிட்டால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் உணர்வுகளை நகைச்சுவை உணர்வோடு வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் உங்கள் பிரியமானவரிடம் ஆழ்ந்த அன்பு ஏற்படும்.

பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக நீங்கள் நரம்பு பிரச்சினையால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்புடன் காணப்பட இத்தகைய உணர்வுகளைத் தவிர்க்க வேண்டும்.




இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் இலக்குகளை அடைவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்ள வேண்டும். இதன் மூலம் உறவின் மதிப்பை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி பிரகாசமாக இருக்கும். சேமிப்பை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த தேக ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று ஆக்கபூர்வமான நாளாக இருக்கும். நீங்கள் புத்துணர்ச்சியுடன் உறுதியாக இருப்பீர்கள். புதிய முயற்சிகள் லாபகரமாக இருக்கும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பணப்புழக்கம் காணப்படும். நீங்கள் அதிகமாக சேமிப்பீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். அதனால் நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்

# இன்றைய ராசி பலன்கள் - 17.08.2023




இன்று அதிக பொறுப்புகளை நீங்கள் சந்திப்பதன் காரணமாக பதட்டமான சூழ்நிலை காணப்படும். முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டாம். பாதுகாப் பற்ற உணர்வு காணப்படும்.

அதிக பணிச்சுமை காணப்படுவ தன் காரணமாக இன்றைய பணிகளை அமைதியாக மேற்கொள்ளுங்கள். பணிகளை ஆற்ற சிறப்பாக திட்டமிடுங்கள்.

இன்று மாறுபடும் மனநிலை காரணமாக எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க வேண்டும்.

நிதிநிலைமை சுமாராக இருக்கும். இன்று அதிக செலவுகள் காணப்படும். நிலைமையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று சுறுசுறுப்பாக காணப்படு வீர்கள். உங்களின் திட்டமிட்ட எளிய அணுகுமுறை மூலம் நன்கு வளர்ச்சி பெறுவீர்கள். உங்களிடம் அதிக உறுதியும் தைரியமும் காணப்படும்.

பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பணியில் உங்கள் அணுகுமுறை கூடுதல் ஊதியத்தை பெற்றுத் தரும்.

உங்கள் நகைச்சுவை உணர்வின் காரணமாக துணை யுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். இன்று அதிக பணம் கிடைக்கும்.

உங்களின் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று திடமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள் அல்ல.இன்று முக்கிய முடிவுகள் எடுப் பதை தவிர்க்க வேண்டும். மனதில் நம்பிக்கையோடு செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

கடினமாக உழைத்தாலும் உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்காது. இது உங்களுக்கு கவலையை உண்டாக் கும். பணியில் சவால்களை சந்திப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமை மந்தமாக இருக்கும். பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படாது.

சளி மற்றும் இருமல் உபாதைகள் ஏற்படலாம். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று உங்கள் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்வீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் உங்கள் செயல்க ளில் வேகமாக இருப்பீர்கள்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப் படும். நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் தனித்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களின் நகைச்சுவை அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் நிதிநிலைமை முன்னேற்றகரமாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan Group Chairman ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRALPARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park




# எழுத்தறிவு, எண்ணறிவு அடைவு நிலைகளை 85 வீதமான தரம் 3 மாணவர் எட்டவில்லை!

## கல்வி அமைச்சர் அதிர்ச்சித் தகவல்

கடந்த 3 வருடங்களில் நீடித்த பாடசாலை மூடல்களால் கல்விக்குப் பெரும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. தரம் 3 இல் கல்வி பயிலும் மாணவர்களில் 85 சதவீதமானவர்கள் ஆகக் குறைந்த எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு நிலைகளை அடையவில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் தலைமையில் சுமார் 800 நிறுவனங்கள் மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் கிடைக்கப்பெற்றதாகத் தெரிவித்த அமைச்சர், ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சியையும், பாலர் பாடசாலைகளை இயக்குபவர்கள் தொடர்பில் கடுமையான அவதானங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

“கல்வி அமைச்சின் தலைமையில் 800 அமைப்புகள் இணைந்து மேற்கொண்ட மதிப்பீட்டிற்கு அமைய தரம் 3 இல் கல்வி கற்கும் மாணவர்களில் 85 வீதமானவர்கள் ஆகக் குறைந்த எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு நிலைகளை அடையவில்லை. இது அவர்களின் இடைநிலை பாடசாலையின் மாற்றத்துக்கும் அதற்கு அப்பாலான வாழ்க்கை மற்றும் தொழிலுக்கும் இன்றியமையாததாகும்” என்றார்.

“தேசிய வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீட்டை – குறிப்பாக ஆரம்பத் தரங்களுக்கு – அதிகரிக்க வேண்டிய அவசர தேவை காணப்படுகின்றது. சிறுவர்களின் அடிப்படைக் கற்றலை ஊக்குவிக்கும் அதேநேரம், கல்வியில் முக்கிய மறுசீரமைப்புக்களை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடிய திறன் மிக்க மனித வளத்தைக் கட்டியெழுப்ப முடியும்” என கல்வி அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

“கொவிட் பரவலால் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டாலும் பெரும்பாலும் ஆசிரியர்கள் பலர் போராட்டங்களில் ஈடுபட்டு கற்றல் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தினர். இவ்வாறு கற்றல் செயற்பாடுகளுக்கு தடங்கல்களை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனவும் அவர் குறிப்பிட்டார்.

“கற்றல் முறைமை மற்றும் பாடசாலை தரங்களில் முதலில் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. முக்கியமாக ஆரம்பப் பிரிவில் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது” எனத் தெரிவித்தார்.

இதேவேளை, “நாடளாவிய ரீதியில் பல பாலர் பாடசாலைகள் காணப்படுகின்றன. அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் எவ்வாறான பயிற்சிகளைப் பெற்று கற்பிக்கின்றார்கள் என்பதை ஆராய வேண்டிய தேவை காணப்படுகின்றது. உயர் தர பரீட்சையைவிட 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை முக்கியமானதொன்றாக எமது சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்றது. இதனை முற்றிலும் மாற்ற வேண்டும். ஏன் இந்த மாற்றங்களை செய்வதற்கு விடுகிறார்கள் இல்லை? ஆசிரியர் சங்கங்கள் சில அரசியல் கட்சிகளுடன் இணைந்து போராட்டங்களில் ஈடுபட்டு குழப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்” – என்றார்.

இங்கு உரையாற்றிய யுனிசெவ்வுன் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டின் ஸ்கூக் கூறுகையில் –

“எழுத்தறிவு எண்ணறிவு மற்றும் சமூகப் பொருளாதாரத் திறன்களே சிறுவர்கள் தமக்கான மற்றும் தமது குடும்பங்கள், சமூகங்கள் உள்ளடங்கலாக நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை வழங்குகின்றன என்று குறிப்பிட்டார்.

“நாடு எதிர்கொண்டுள்ள தொடர்ச்சியான இன்னல்களால் கல்வியை இழப்பவர்கள், மெதுவாகக் கற்றுக் கொள்பவர்கள், கல்வியில் பின்தங்கியுள்ள சிறுவர்களின் கற்றல் சாதனையில் விரிவடைந்துவரும் ஏற்றத்தாழ்வுகளை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு செல்லத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள கல்வி அமைச்சின் முயற்சிகளைப் பாராட்டுகின்றோம்” எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 3 வருடங்களில் நீடித்த பாடசாலை மூடல்கள் மற்றும் அவ்வப்போது கல்விக்கு ஏற்பட்ட இடையூறுகளால் பாதிக்கப்பட்ட நாடு முழுவதிலுமுள்ள 1.6 மில்லியன் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை மீட்பதற்கு உதவி செய்யும் தேசிய முயற்சிக்கு கல்வி அமைச்சும் யுனிசெவ் நிறுவனமும் தலைமை தாங்குகின்றன.

மொத்த தேசிய உற்பத்தியில் 2 வீதத்திற்கும் குறைவான தொகையையே இலங்கை தற்போது கல்விக்காக ஒதுக்கியுள்ளது. இது கல்விக்கான ஒதுக்கீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 முதல் 6 வீதங்களாக இருக்க வேண்டும் என்ற சர்வதேச அளவுகோலுக்கு கீழ் காணப்படுவதுடன் தெற்காசியப் பிராந்தியத்தில் இதுவே மிகவும் குறைவாகவும் காணப்படுகின்றது.

கற்றல் நெருக்கடியானது பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள சிறுவர்களையும் ஆரம்பத் தரங்களில் உள்ள சிறுவர்களையும் பெருந்தோட்டத் துறையில் உள்ளவர்களையும் பாதித்துள்ளது.

“கற்றல் மீட்பு“ தொடர்பில் அபிவிருத்திப் பங்காளர்களின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கில் கல்வி அமைச்சு மற்றும் யுனிசெவ் ஆகியன கடந்த ஜுலை மாதம் விசேட சந்திப்பொன்றை நடத்தியிருந்தது. குறைபாடுகள் மற்றும் முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கு 9 மாகாணங்களிலும் செயலமர்வுகளையும் நடத்தியது.

இதன் இறுதி நிகழ்வு நேற்று புதன்கிழமை கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யுனிசெவ்வின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டியன் ஸ்கூக் மற்றும் அரசாங்க அபிவிருத்திப் பங்காளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.